## 19. புறங்கூறாமை

181. *அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்*
*புறங்கூறா னென்றல் இனிது*

**அறநெறிகளைப் போற்றாதவனாக இருந்தாலும்**
**அறச் செயல்களைப் புரியாதவனாக இருந்தாலும்**
**அத்துணைப் பெரிய விடயமில்லை !**
**அடுத்தவர் பற்றி புறங்கூறாமல் இருப்பதே இனிது !**

182. *அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே*
*புறனழீஇப் பொய்த்து நகை*

**முகம் பார்த்துப் பேசும் போது**
**முகத்துதியாக பொய்யாக சிரித்துப் பேசி**
**முன்னெதிரில் இல்லாத போது பழித்துப் பேசும்**
**முள்ளெனக் குத்தும் புறங்கூறுதலின் தீது**
**முறையற்ற செயலினும் தீதாம் !**

183. *புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்*
*அறங்கூறும் ஆக்கந் தரும்*

**அடுத்தவரைக் காணும் இடத்தில் ஒன்றாய்**
**அவரைக் காணாத இடத்தில் இன்னொன்றுமாய்**
**அளவில்லாப் புறங்கூறி வாழ்வதைவிடச் சாவது**
**அறநூல்கள் அறிவுறுத்துகிறப் புண்ணியம் ஆகும் !**

184. *கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க*
*முன்னின்று பின்னோக்காச் சொல்*

**கண்ணோடு கண் பார்த்து ஒருவரது குறைகளைக்**
**கடுமையாகச் சொன்னாலும் சொல்க !**
**கண் முன்னால் இல்லாதவரை முதுகுக்குப் பின்னால்**
**கழந்துரைத்து புறங்கூறுவது தவிர்த்திடுக !**

185. *அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்*
*புன்மையாற் காணப் படும்*

**மருகி புறம் கூறும் சொல்லே – அவன்**
**மனம் அறம் விரும்பவில்லை என**
**மத்தளமிட்டுக் காட்டிவிடும் !**

**186.** *பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்*
*திறன்தெரிந்து கூறப் படும்*

**பிறர் மீது பழி கூறுபவர் மீது**
**பிறர் அவரின் பழிச் செயல்களைப்**
**பிரித்தாய்ந்து அவற்றின் குற்றங்களைப்**
**பிணைத்துப் பழிப்பார்கள் !**

**187.** *பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்*

**மகிழ்வுடன் பழகி**
**மலரும் நட்பை தொடரத் தெரியாதவர்கள்**
**மனதை வருத்துமளவு புறங்கூறி**
**மற்ற நண்பர்களையும் பிரித்து விடுவர் !**

**188.** *துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினார்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு*

**தூய்மையாகப் பழகியவரின் குறையைக்கூட**
**தூற்றிப் புறம் பேசுவோர் – பழகாத**
**தூரத்தில் இருக்கும் அயலாரை எப்படி எப்படியோ**
**தூற்ற மாட்டார்களா என்ன ?**

**189.** *அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்*
*புன்சொ லுரைப்பான் பொறை*

**முதுகுக்குப் பின்னால் ஒருவரைப் பற்றி**
**முழுதாகப் புறங்கூறுவோர் உடல் பாரத்தை**
**முதற்கொண்டு தாங்கிச் சுமப்பதே**
**முதிர் அறம் என்கிறதோ பூமி ?**

**190.** *ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னு முயிர்க்கு*

**மற்றவர் குற்றத்தைக் காண்பவர்கள்**
**மனதில் தம் குற்றத்தை எண்ணிவிட்டால்**
**மறுபடியும் புறங்கூறும் பழக்கம் போகும் ! – அதனால்**
**மண்ணுயிர்க்கும் தீதில்லையே !**